
# புதிய காலைக்கதிர்

காலை 01 கதிர் 01

வைகாசி 2013



காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

**கல்வி – கலை – இலக்கிய**

**இதழ்**

காலையடி மறுமலர்ச்சி மன்ற
மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

# புதிய காலைக்கதிர்

**காலை 01 வைகாசி -2013 கதிர் 01**

ஆசிரியர் : ஜெ. நிவர்சன்

படைப்பாளிகள் :

ச. அனுஜன்
தி. திலினா
சி. விதுர்சா
நா. லக்சிகா
வ. சேதுகா
ஜெ. ஜனனி
சி. கிரிசா
கு. பதுர்சிகா
யோ. நிலாவினி
சி. துவாரகன்
யா. மாதங்கி
ச.தாட்சாயினி
ஜெ.லோஜிந்தன்
அரவிந்
யா. சேயவன்

பக்க வடிவமைப்பு : தனுட்

அட்டை வடிவமைப்பு :
ஜெ. நிவர்சன்

வெளியீடு :
மாணவர் மன்றம்,
காலையடி மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி,
பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

விலை : ரூபா 20/-

BY NC SA

## புதிய காலைக்கதிர் பற்றி

புதிய காலைக்கதிர் எனும் சஞ்சிகை வெளியிடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். கல்வி, கலை, இலக்கியம் என்ற விடயங்களுடன் 1989,1990 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த காலைக்கதிர் எனும் உருடெழுத்து இதழின் புதிய வடிவமே “புதிய காலைக்கதிர்” ஆகும். இந்த புதிய காலைக்கதிரினூடாக எமது கிராமத்து மாணவர்களின் ஆற்றல்களை உங்கள் இரசனைக்கு முன்வைக்கின்றோம். காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சி செயற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்

மறுமலர்ச்சி மன்றம் பல கலைஞர்களையும் கவிஞர்களையும் உருவாக்கியுள்ளது. கொடூரமான போர் புலம்பெயர்வு, இடம்பெயர்வு போன்ற பல இன்னல்களுக்கு மத்தியிலும் மறுமலர்ச்சி மன்றம் தனது பயணத்தை தொடர்கின்றது. அந்தத் தொடர்பயணத்தில் நாங்களும் தொடர்கின்றோம். காலைக்கதிர் இதழ் என ஆரம்பித்து இன்று புதிய பொலிவுடன் புதிய காலைக்கதிராய் உருவெடுத்துள்ள இந்தச் சஞ்சிகை கல்வி, கலை, இலக்கிய, சமூக விஞ்ஞான, அறிவியல், தொழில்நுட்ப விடயங்களை வெளிப்படுத்தும் ஆவணப் படுத்தும் தேவையை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கின்றோம். இந்தச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதனால் சிறந்த ஓர் சமூகத்தை உருவாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே மறுமலர்ச்சி மன்றமும் புதிய காலைக்கதிரும் என்றும் பிரிக்க முடியாதன. இந்தப் புதிய காலைக்கதிர் உங்கள் கைகளில் தவழும் வேளை அடுத்த புதிய காலைக்கதிரின் வெளியீட்டு முயற்ச்சியில் நாம் முனைந்து கொண்டிருப்போம் முடிந்தால் தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி. - இதழாசிரியர்

# ஆசியுரை




சட்டத்தரனி சோ.தேவராஜா

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் 1989, 1990 ஆம் ஆண்டுகளில் காலைக்கதிர் எனும் இதழை வெளியிட்டோம். அன்றைய காலத்தில் உருட்டெழுத்து இதழாக வெளியிடும் நிலையே ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய தொழில்நுட்ப வசதியால் அச்சு இதழை வெளியிடுகின்றமைக்கு ஆசியுரை வழங்குவதலில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அன்றைய காலங்களில் நிறைய எழுத்தாளர்கள் இருந்தார்கள். அவர்கள் தற்போது புலம்பெயர்ந்து விட்டார்கள். ஆனாலும் எமது கிராமியப் பண்பாட்டை வெளிப்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அந்தவகையில் இந்த புதியகாலைக்கதிர் என்னும் இதழ் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினையும் புலம்பெயர் நமது உறவுகளினையும் இணைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. கடந்த காலத்தில் எனக்கு புலம்பெயர் உறவுகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் தமிழ் உணர்வும் கிராமிய கலை உணர்வும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது.

மேலும் இந்த இதழ் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கட்டமாக இருக்கும் என நான் நம்புகின்றேன். இதன் மூலம் எமது அபிவிருத்திக் கனவு நினைவாகும். அத்துடன் சிறுவர்களின் இந்த ஆக்கங்களைப் பார்க்கும் போது அவர்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் மீதும் நமது கிராமத்தின் மீதும் கொண்டுள்ள பற்றினை வெளிப்படுத்திக்காட்டுகின்றது. இந்த இதழை பல நாடுகளிற்கு அனுப்பி வெளியிடுவதனுடாக அங்கே உள்ள உறவுகள் மறுமலர்ச்சி மன்றத்தைப் பற்றியும் அதன் நிலை பற்றியும் அறிந்து கொள்வார்கள். அத்துடன் புலம் பெயர்ந்து அங்கே உள்ள பிள்ளைகள் (சிறுவர்கள்) மறுமலர்ச்சி மன்றத்தை பார்க்க வேண்டும் என்ற உணர்வையும் பெறுவார்கள். ஆகவே இந்த இதழை வெளியிடுவதற்கு முன்னின்று செயற்படும் மறுமலர்ச்சி மன்றத்தின் முன்னைய செயலாளர் ஜெகநாதன் நிவர்சன் அவர்களுக்கும் மற்றும் இந்த இதழில் தமது ஆக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும் எனது ஆசியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி



# ஆசியுரை

கலாநிதி ந. இரவீந்திரன்
உப பீடாதிபதி, தர்க்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரி

காலையடி மறுமலர்ச்சி மன்றம் "புதிய காலைக்கதிர்" இதழை வெளியிட உத்தேசித்துள்ளமை குறித்து மிக்க மகிழ்ச்சி. எமக்கான எழுத்துப் பயிற்சிக் களமாக முன்னர் "காலைக்கதிர்" அமைந்திருந்தது. அப்போதெல்லாம் எங்கள் புனைபெயரில் எல்லோருக்குமே முன்னால் "காலை" வந்து நிற்கும். நான் காலைரவி. சூரியனின் மறுபெயர் ஒன்று இரவி அந்த வகையில் நான் உதயசூரியன் என்று என் புனைபெயர் வாயிலாக ஆகிவிட்டேன். அதன் கனதி அதிகம் என்பதால் பின்னர் சொந்தப் பெயருக்கு மாறிவிட்டேன். இப்போதும் காலைரவி என அழைக்கத்தக்க தகுதி எனக்கு சாத்தியமாக வேண்டும் என்ற முயற்சியிலேயே தொடர்ந்து படித்துக்கொண்டும் செயற்பட்டுக்கொண்டும் இருக்கிறேன். அவ்வாறாக ஆகும் வலுவை மன்றம் எங்களுக்கு ஊட்டியிருந்தது. ஆகாமல் போயின் தொடர்ந்த முயற்சியில் நாம் தவறியிருக்கிறோம் என்று ஆகுமே அல்லாமல் மன்றம் போட்டுத்தந்த அடித்தளம் போதிய வலுவுடையதுதான்.

அத்தகைய வலுவான அத்திவாரத்தை இன்றைய தலைமுறைக்கு வழங்கும் வகையில் "புதிய காலைக்கதிர்" அமைய வாழ்த்துக்கள். மன்றத்தின் ஆத்ம பலம் அலாதியானது இந்தப் புலர் பொழுதில் முகிழ்க்கும் மொட்டுக்களையும் பயனுறுதியுடன் நீண்டகாலம் வாசம் பரப்பும் வகையில் மன்றம் புதிய காலைக்கதிரைப் படைத்தளிக்கும் என்ற நம்பிக்கைகளுடன் தொடர்வோம்.... ★

---

**மாணவர்களின் ஆக்கங்களும் இச் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**

இப் "புதிய காலைக்கதிர்" சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக புலம்பெயர், எமது கிராமத்து மாணவர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு விதமான ஆக்கங்களையும் மாணவர் மன்றம் வேண்டிநிற்கின்றது. தங்களால் சுயமாக உருவாக்கப்பட்டதான ஆக்கங்களை தட்டச்சு செய்தோ கையெழுத்துப் பிரதியாகவோ வழங்க முடியும். ஓவியங்களை ஸ்கான் பண்ணி மென்பிரதியாகவும் அனுப்பிவைக்கலாம். உங்கள் ஆக்கங்களை அனுப்பவோ ஒப்படைக்கவோ வேண்டிய

முகவரி : காலையடி மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு.

மின்னஞ்சல் முகவரி : saba.thanujan@gmail.com

# வாழ்த்துரை



சு.யாதவன் MA
தலைவர், மறுமலர்ச்சி மன்றம்.

எமது மறுமலர்ச்சி மன்றத்தின் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடான "காலைக்கதிர்" தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர், இருபதாண்டு காலப்பகுதிக்கு மேலாக வெளிவரவில்லை. இருந்தும் தற்போது "புதிய காலைக்கதிர்" ஆக அச்செழுத்துச் சஞ்சிகையாக வெளிவருவது எமக்கெல்லாம் மகிழ்வூட்டுகிறது.

இருபதாண்டு காலப்பகுதியில் காலைக்கதிர் அற்ற மன்ற சூழலில் வாழ்ந்த இழப்பில், அதனால் ஏற்பட்ட அங்கலாய்ப்பில் எமது மன்ற இளைஞர் சிலர் எமது கிராமங்களின் மாணவர்களை ஒன்றுதிரட்டி, மாணவர் மன்றம் உருவாக்கி, அவர்கள் மூலமாக புதிய காலைக்கதிர் சஞ்சிகையை வெளியிட முனைகின்றனர். தமக்குக் கிடைக்காததை இன்றைய எமது மாணவச் சிறார்களுக்கு கிடைக்கச் செய்வதில் ஊக்கிகளாக, உந்துசக்திகளாக செயற்படுவது போற்றத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

சிறுவர்களுக்கான முறையான, அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆக்கங்கள் தற்போது வெளிவருவது மிகவும் குறைவாகும். காரணம் பல ஆக்கங்கள் இவர்களது வயதுப் பராயத்தினர்க்கு மேற்பட்டவர்களால் படைக்கப்படுகின்றமை ஆகும். இப்படைப்பாளிகள் தங்கள் வயதுப் பராயத்தினர் மத்தியில் தம்மை தக்கவைக்க முனைகின்றனர். எனவே இவ்வாறான படைப்புக்கள் சிறுவர்களிடமிருந்து விலகிச் செல்கின்றது.

இந்நிலையில் எமது மறுமலர்ச்சி மன்றத்தின் மாணவர் மன்றத்தின் வெளியீடான "புதிய காலைக்கதிர்" சஞ்சிகையானது, மாணவ இளம் பராயத்தினரது தேவை கருதி, அப்பராயத்தினரால் படைக்கப்பட்ட பெரும்பாலான ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. இச் சஞ்சிகையானது சிறுவர்களின் சுயசிந்தனையைத் தட்டியெழுப்பி, எதிர்காலத்தில் மூடநம்பிக்கைகள் அற்ற, முற்போக்கு சிந்தனையுடைய கல்வி கற்ற சமுதாயமொன்றை எமது கிராமங்களில் பரிணமிக்கச் செய்யும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

இப் புதிய காலைக்கதிர் சஞ்சிகை போன்று இன்னும் பல புதிய காலைக்கதிர் சஞ்சிகைகள் தொடராக வெளிவந்து, எமது கிராமங்களின் சிறார்களின் ஆக்க இலக்கியத் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒளிவீசவேண்டுமென வாழ்த்துகின்றேன்.



# ஆசியுரை

கவிஞர் அழ. பகீரதன்
பொருளாளர், மறுமலர்ச்சி மன்றம்.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நாம் 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் இரு "காலைக்கதிர்" என்னும் இதழ்களை வெளியிட்டு இருந்தோம். இதனைப் பார்த்த கடந்த வருட செயலாளர் நிவர்சன் அவர்கள் மீண்டும் தான் "புதிய காலைக்கதிர்" எனும் பெயரில் வெயளியிடப்போவதாக கூறியிருந்தார். அத்துடன் பலரிடமும் ஆக்கங்களை எழுதி வாங்கினார். புதியகாலைக்கதிர் என்னும் பெயர் மிகவும் பொருத்தமான ஒன்றாகவே இருக்கும். புதிய காலத்தில் புதிய மன்றமாக மறுமலர்ச்சி மன்றம் உருவாகும் நேரத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக உருவெடுத்திருக்கும் இந்த புதிய காலைக்கதிர் என்பது பொருத்தமான பெயர் ஒன்றாகவே அமைந்துள்ளது. மறுமலர்ச்சி மன்றத்தின் தற்போதைய அபிவிருத்திப் பணிகளை முன்னொடுப்பதை கருத்தில் கொண்டு இந்த ஆசியுரையினை எழுதுகின்றேன்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி ஆகும். அதுபோல இக்காலத்தின் கருத்தையும் சிந்தனைகளையும் கருத்திற்கொண்டு இந்த இதழ் வெளிவருகின்றது. இதை இதழ் என்று மட்டும் கூறாமல் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் புதிய அபிவிருத்திக்கான ஒன்றிணைவாகவே நான் பார்க்கின்றேன். கருத்துக்கள் என்றவகையில் அன்றைய காலத்தில் மதுப்பவனை மறறும் பெண்அடிமை என்பதே முக்கிய கருத்தாக இருந்தது. ஆனால் தற்போது வெவ்வேறான கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளை இந்த இதழ் மூலம் நீங்கள் அறியக்கூடியதாக இருக்கும். இந்த இதழை மட்டும் வெளியிடாது தொடர்ந்தும் பல ஆக்கங்களைத் தாங்கி இன்னும் பல இதழ்கள் வெளிவரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். இதன் மூலம் மறுமலர்ச்சி மன்றத்திற்கும் புலம்பெயர் உறுவுகளிற்கும் இடையேயான தொடர்பை பேணவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இந்த இதழ் வெளிவருவதற்கு அயரது உழைத்த ஜெகநாதன் நிவர்சன் அவர்களுக்கும் மேலும் பல ஆக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சிறந்த வாசகரைத் தெரிவுசெய்வதற்க்கான போட்டிகள்



வெகு விரைவில் மறுமலர்ச்சி மன்ற நூலக அங்கத்தவர்களுக்கிடையில் பாலர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு ஆகிய மட்டங்களில் சிறந்த வாசகர்களைத் தெரிவு செய்து பெறுமதியான பல்வேறு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

வாசிப்பின் மூலம் வாழ்வை இன்பமானதாக்குவோம் !

# நட்பு

தி. திலினா
க.பொ.த (உ/த)

பள்ளி எனும் நந்தவனத்தில்
பசுமலராய் வந்த நன் நட்பே!

உறவுகள் பல ஆயிரம் ஆயிரமாய்
உலகத்தில் இருந்தாலும்
நட்பு எனும் நன்மலரை நாடாத
மானிடரே கிடையாதே!

சோகங்கள் பல வந்தாலும்
சுமைகள் பலவெம்மைச் சூழ்ந்தாலும்


துன்பத்தில் எம் துணையாய் - நாம்
துவண்டிடாது தோழ் கொடுத்து
எம்மைத் தூக்கி உயர்த்தும்
ஏணிப்படிதான் உயர்ந்த நட்பு

உண்மைதனை உணர்த்தி - எம்மை
உயர்வாகவிவ் வுலகு போற்ற
உத்தமராய் வாழ வழி வகுப்பதுதானடா
உயர்வான உண்மை நட்பு

வாழ்வை வாழ ஆசைப்பட்டால் - நீ
வையகம் போற்ற வழர நினைத்தால்
ஆபத்தில் உதவும் நட்பை அறிந்து
அன்பால் நட்பை அகலப் பரப்பு



# நனோ உலகில் ஒரு நாள்



ச. அனுஜன்
க.பொ.த (உ/த)

இன்று 2011.06.11 08.05.00 pm

நான் தான் சுரேஸ். எனக்கு வயது 30. அடுத்த வருசம் 31. இல்ல அடுத்த வருசம் நான் உயிரோட இருக்க மாட்டேன். ஏனென்டா எனக்கு புற்றுநோய். ஏல்லா டோக்ரரும் சொல்லிப்போட்டினம் இன்னும் 6 மாதம் தான் என்டு. இந்தியா கூட போய்ப் பாத்திட்டன்.

இவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் என் பையன் ராயுவோடயும் என்னோட மனைவியோடயும் 6 மாதம் இருக்கலாம் என்டதில் எனக்கு சந்தோசம்தான்.

எல்லாக் கவலைகளையும் மறந்து நான் சந்தோசமா இருக்கிறது என்டால் இந்தக் கடற்கரேலதான். உள்ளங்கால் வரைக்கும் குளிரவைக்கும் காற்று. துரத்தில் தெரியிற துறைமுகத்தில நிக்கிற கப்பல்கள்ள இருந்து வாற வெளிச்சம், நட்ச்சத்திரங்கள் பாத்துக்கொண்டே இருக்கலாம். ஆனா இப்ப கடற்கரையில இருக்கிறது நானும் என்ர நாய் “யோனும்” தான்.

........................

திடீரென்டு ஒரு வெளிச்சம் என்ர கண்ண மறைக்குது. கண்ணத்திறந்து பாக்கிறன் ஒரு கார் போன்ற அமைப்பு. அனா அது தரைக்கு மேல் கொஞ்ச உயரத்தில் மிதந்து கொண்டிருக்குது. அதில் இருந்து ஒரு மனிதன் (சுமார் 25 வயதில்) வெளிய வர்றான். அவன் என்ன நோக்கிவர ஆரம்பித்தான். எனக்கு பயமா இருந்தாலும் தயிரியம் மாதிரி காட்டிக் கொண்டு இருந்தன். அவன் என்னட்ட வந்து தொப்பியக் களட்டிப்போட்டு என் அருகில இருந்த கல்லில் இருநதான்.



'கரபன் நனோக்குளாய்களால் ஆக்கப்பட்டவை என்றும், இவை இரும்பைவிட வலிமையானது என்றும் கூறினான்.

அவன் என்னப் பாத்து தன்ர பேர் ராஜு என்டான். (அது என்னோட பையன் பேர்) நான்தான் அவனோட அப்பா எண்டான். நான் சிரிச்சுக் கொண்டே உனக்கு என்னவிட 5 வயதுதான் குறைவு இருக்கும். ஆனா என்ர மகன் என்றா? என்றேன். அதுக்கவன் தான் எதிர்காலத்தில் இருந்து வாறதாகக் கூறினான். (அதாவது 2031ம் அண்டில் இருந்து)

நான் மறுபடியும் சிரிச்சுக் கொண்டே எந்தப்படத்தில் இந்தக் கதையைப் பார்த்தாய் என்டேன். அவன் தன்ர பையில் இருந்து போன் மாதிரியான ஒன்றை எடுத்தான்.

சில போட்டோக்களை காட்டினான். அதில் என்ர மூன்டு மாதத்துக்குப் பிறகு எடுத்தபடங்களும் என்ர மனைவி பிள்ளைகளின்ர 20 வருசத்திக்கு பிறகு எடுத்த மாதிரியானா படங்களும் இருந்தன. அப்பவும் நான் நம்பேல்லை. அவன் என்னை தன்னோட காருக்குள் இழுத்துக்கொண்டு போனான். உள்ள போன பிறகுதான் தெரியும் அது கார் இல்ல அது ஒரு காலஇயந்திரம் என்டு. அதில கைக்கடிகாரம் இருந்தது. அது நான் கட்டீட்டு இருக்கிற கடிகாரம் தான். ஆனா கொஞ்சம் பழுதாய் இருந்தது அதை அவன் என்னோட ஞாபகமா வைத்திருக்கிறதா சொன்னான்.

நான் அவன நம்பினன் அவன் நான் 2012 ஆம் ஆண்டே இறந்து விடுவன் என்டு சொன்னான். அது எனக்கு தெரிஞ்சது தானே. ஆனா அவனால் என்னக் காப்பாத்த முடியும் என்டும் அதுக்காக தான் வந்திருக்கிறன் என்டும் சொன்னான். எப்படிக் காப்பாத்துவாய்? உலகத்தில் எந்த முலைக்கு போனாலும் காப்பாற்ற முடியாதே! என்டன். அவன் சிரிச்சுக்கொண்டே 2031ம் ஆண்டுக்கு நாங்க ரண்டுபேரும் போனால் அங்க இருக்கிற நனோ தொழில் நுட்ப ரோபோக்கள் மூலம் இதை சரிசெய்து கொள்ளலாம் என்றான். எனக்கு காலப் பயணத்தையும் நோயில்லாமல் என்ர குடும்பத்தோட வழ்றதையும் நினைக்க சந்தோசமா இருந்தது. நான் காலப்பயணத்திற்க்கு தயாரானேன். அவன் இயந்திரத்த செப்பம் செய்து விட்டு புறப்பட்டான். மீண்டும் ஒரு பாரிய ஒளி

..........................

2031.6.11. 08.05.00 pm

என்ன ஒரு ஆச்சரியம் 2031ம் ஆண்டுக்குரிய உலகில் (நனோ உலகில்) நான் இருக்கிறேன். இங்குள்ள கட்டிடங்கள் பாதி உயரமாகவும் மீதி நிலத்திற்க்கு கீளும் இருப்பதை உணர்ந்தேன். மனிதர்கள் எல்லோரும் வேகமாக நடந்து கொண்ருந்த்தனர். அப்போது ராயு என்னிடம் ஒரு பையைக் கொடுத்தான். அதில ஆடைகளும், சப்பாத்துகளும், தொப்பியும் இருந்தது. அவற்றை அணிந்து வருமாறு ராயு என்னிடம் கூறினான். நானும் அவற்றை அணிந்து கொண்டேன். அவற்றுடன் ராயுவுடன் எனது எதிர்கால வீட்டிற்க்கு சென்றேன். அங்கே எனது 45 வயது மனைவியை கண்டேன். ஆனால் அவள் என்னை பார்க்கவில்லை. பார்க்காதவாறு இரகசிகமாக ராயு என்னை தனது அறைக்கு அழைத்துச் சென்றான். எதற்க்காக இரகசிகமாக வந்தோம் என்றேன். அதற்க்கு அவன் இந்த விடயம் யாருக்கும் தெரியாது என்றும், இது சட்டத்திற்க்கு புறம்பானது என்றும் கூறினான்.

அவனது அறை மிக அபுர்வமாக இருந்தது. அவனது அறைச்சுவர்கள் உயர்வாக இருந்தது. உயரத்தில் தட்டுகள் அமைத்து அங்கே பொருட்கள் வைக்கப்ட்டிருந்தது.

அவற்றை எவ்வாறு எடுப்பாய்? என்று ராயுவிடம் கேட்க்க, அவன் சுவரில் பல்லிபோல் தவண்டு தவண்டு ஏற ஆரம்பித்தான். அவ்வாறு ஏற என்னாலும் முடிந்தது. அது எனது சப்பாத்தின் மூலம் என்று புரிந்து கொண்டேன்.

பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலை செல்லவேண்டும் என்று ராயு கூறினான். எனக்கு இனம் புரியாத ஒரு மகிழச்சி, அதேநேரம் இது நடக்குமா எனும் ஒரு சந்தேகம். நாம் வைத்தியசாலை செல்லப் புறப்பட்டோம்.

வீதியில் நடந்து சென்றுகொண்டு இருந்தோம். மழை வருவது போல் எனக்கு தோன்றியது. அனால் ராயு அதைப் பற்றிக் கவலைப்பாடமல் நடந்து கொண்டே இருந்தான். மழை வந்தேவிட்டது. ராயு தனது ஆடையில் இருந்த தொப்பியை அணிந்து கொண்டான். எனக்கும் அணிந்து விட்டான் என்ன ஆச்சரியம் ஆடை நனையவே இல்லை. இதைப் பற்றி ராயுவிடம் நான் கேட்டேன். ராயு இது நனோத் தொழில்நுட்பம் மூலம் செய்யப்பட்ட ஆடை என்றும், இது நனையாது என்றும் கூறினான். அப்படியானால் தோய்ப்பது எவ்வாறு என்று கேடக, அவன் சிரித்த படியே இவை அழுக்குப் படியாத ஆடைகள் என்றும் இவற்றை தோய்க்க தேவையில்லை என்றும் கூறினான்.

இவ்வாறு பேசிக்கொண்டே நாம் ஒரு பாலத்தை அடைந்தோம். அது இரும்பால் அமைக்கப்பட்டதாக தெரியவில்லை. இதைப்பற்றி கேட்க்க நினைக்கவே ராயு இவை காபன் நனோக்குளாய்களால் ஆக்கப்பட்டவை என்றும், இவை இரும்பைவிட வலிமையானது என்றும் கூறினான். இது ஒரு நனோ தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு என்று உணர்ந்து கொண்டேன்.

ஒரு வழியாக நாம் மருத்துவ மனையை அடைந்தோம். அங்கே சிறுவர்கள் எல்லோரும் பயம் இன்றி ஊசி போட்டுக்கொள்வதை கண்டு வியந்தேன். எனக்கான சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு வெட்டுக்கூட இல்லாமல் எனக்கு சீகிட்சைகள் நடந்தன.

என்னையே என்னால் நம்பமுடியவில்லை. எனக்கு புற்று நோய் குணம் அடைந்தது. நான் கனவில் கூட நினைக்காதது நடந்தது. எனக்கான சில மருந்துகள் வளங்கப்பட்டது. அவை மிகசசிறியனவாக இருந்தன. அவற்றை எனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு ராயுவுடன் கால இயந்திரம் விடப்பட்ட இடத்தை நோக்கிச் சென்றேன். கால இயந்திரத்தில் ஏறி மிண்டும் 2011 ஐ நோக்கி புறப்பட ஆரம்பித்தோம் மீண்டும் அதே ஒளி.

..................................

2011.06.11 08.05.01 pm இன்று

நான் காலஇயந்திரத்தில் இருந்து கிழே இறங்கினேன். எனது ஒரு நாள் பயனம் ஒரு வினாடியினுள் முடிவடைந்ததை உணர்கிறேன். எனக்காக கடற்கரை யோரம் "யோன்" (எனது நாய்) காத்திருக்கிறது. ராயு மிண்டும் தனது காலத்திற்க்கு புறப்பட்டான். அவனுக்காக நான் காத்துக்கொண்டு அவனது காலத்தில் இருப்பேன்...

.....................

Note :- ""நனோ உலகில் ஒரு நாள்"" இச்சிறுகதை Nano Technology போட்டி ஒன்றிற்காக எழுதப்பட்டது. தேசியமட்ட பரிசிலும் வென்றது. இச்சிறுகதையில் ஆங்கான்கே புகுத்தப்பட்ட நனோ கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் சாத்தியமானவையே.



# நாகரீகமும் பெண்களும்...

சி. விதுர்சா
க.பொ.த (உ/த)

நட்சத்திரப் பூக்களாய் நடமாடும் நங்கையரே
நவநாகரீக ஆடையென்று நாசமாய் போகின்றீரே!
நாளைய உலகிற்கு நாகரீகம் தேவைதான் – மேலை
நாகரீகமே வாழ்க்கையென்றால் நம்பண்பாடு யார்கையில்?



பழைய பஞ்சாங்கமா பாவாடையும் தாவணியும்?
புதிய பண்பாடா பொலித்தீன் உடைகள்?
நம் பண்பாடு நலமே வாள
இன்றே உடுத்திடு இனியநம் சேலையை


திருமகளாய் போற்றிடும் பெண்னே!
திருந்தி நீயும் மனம் மாறிடு
மாறிடு பெண்ணே – நல்ல
ஆற்றல்மிகு திருமகளாய்!

---

ஒலிபொருக்கிகள் ஓங்கி ஒலிக்கின்றது
கடவுளின் பெயரால்

***





மனிதர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள்
மனித உரிமைகள் பற்றி
பேசிக்கெண்டிருக்கும் வேளை

***

நூலகங்கள் பூட்டப்படுகின்றன
கறையான்களிற்கு உணவளிப்பதற்காக

***

உறைக்கும் உண்மைகள் –

# சுவாமி விபுலானந்தர்


- யோ. நிலாவினி

விபுலானந்த அடிகள் மட்டக்களப்புப் பிரதேசத்தின் காரைதீவு என்னும் கிராமத்தில் சாமித்தம்பி - கண்ணம்மை தம்பதியினருக்கு 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனன். இவர் தனது ஆரம்பக் கல்வியை குஞ்சுத்தம்பி ஆசிரியர், வசந்தராசப் பிள்ளை, வைத்தியலிங்கம் தேசிகர் ஆகியோரிடம் கற்றார்.

இவர் தனது பதினாறு வயதில் கேம்பிறிச் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தார். இவரே மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்துகின்ற பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்திய முதலாவது இலங்கையராவார். 1920 இல் லண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றார். ஆசிரியராக கல்முனை கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலை, யாழ் புனித சம்பத்திரிசியார் பாடசாலை, வைத்திஸ்வரா வித்தியாசாலை ஆகிய வற்றில் பணியாற்றினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.

1922 ஆம் ஆண்டில் சென்னை இராமகிருஸ்ண மடத்துடன் இணைந்து துறவியானார். இவருக்கு "பிரபோசைதன்யர்" என்னும் பிரமச்சாரிய நாமம் வழங்கப்பட்டது. 1925 இல் மீண்டும் இலங்கை வந்த விபுலானந்தர் இந்து மாணவர்கள் சைவசமயச் சூழலில் கல்வி கற்பதற்காக மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலையம், திருகோணமலை இந்துக் கல்லூரி உட்பட கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தர்

## சுவாமி விபுலானந்தர்



வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

---

இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்
ஏமக்கு நிக ராரெனப்பர் இருகணத்தி னுளத்தில்
துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்
சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லலைவார்

---

மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்
மறுபிறவித் திரைகவர வந்தியையுங் கருவி
கரணமுறு முடலெடுத்து மண்ணுலகி னுழல்வார்
காதலிப்பா ரெண்ணிறைந்த வேதனையுட் புகுவார்

ஊடாக 38 பள்ளிக்கூடங்களை நிறுவி செயற்படுத்தினார்.

விபுலானந்தர் தமிழர் மத்தியில் நிலவிய சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக குரல்கொடுத்ததுடன், தாய்மொழியிலேயே கல்விச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் வலியுறுத்தினார்.

விவேகானந்தர், கலைமகள், இராமகிருஸ்ண விஜஜம் போன்ற சஞ்சிகைகளில் பல்வேறு சமய சமரசத்தை வலியுறுத்தும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

இவர் இலங்கையின் முதல் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தமிழ்த் துறைகளில் பணியாற்றினார். இவர் கல்வி வெளியீட்டுப் பிரிவு, பாடநூற்சபை, தேர்வுச்சபை, கல்வி ஆராய்ச்சி சபை, யாழ்ப்பாண வாலிபர் கங்கிரஸ், ஆரிய திராவிட பாஸா விருத்திச் சங்கம், விஞ்ஞான நூலாக்க சொல்லாக்கக் கழகம் ஆகியவற்றில் மிக முக்கியமான பொறுப்புகளை வகித்தார். சமயம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான பாடத்திட்டங்களை உருவாக்கியளித்தார்.

தமிழ் இசை பற்றிய சிறந்த ஆய்வு நூலான யாழ்நூல், நாடகம் பற்றிய ஆய்வான மதங்கசூளாமணி ஆகியவற்றுடன் பல தோத்திரப் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி தமது ஐம்பத்து ஐந்தாவது வயதில் தனது இவ்வுலக வாழ்வை இறுதிசெய்தார்.

---

### உறைக்கும் உண்மைகள் - ஜெ.நிவர்சன்

கடவுளின் சிலைகள்கூட
காணமல் போகின்றது

***

புலம்பெயர்தவர்கள்
புலம்பிக்கொண்டிருக்கும்வேளை
பலர் புலம்பெயர்ந்துகொண்டிருக்கின்றார்கள்

***

மனிதர்கள் காணமல் போகின்றார்கள்
பேனாக்களுடன்

***

பெண்கள் உரிமை என்று பேசுகின்றான்
மனைவியை வீட்டுக்கு அனுப்பிய கணவன்

***



# அன்னை




கருவிற்குள் என்னை
பதியம் போட்டு
பத்து மாதங்கள்
பக்குவமாய் சுமந்தாள்

விழிகளை மூடி வலிகளை
சுமந்து
இவ்வுலகிற்கு என்னை
தந்திடுவாள்

உதிரத்தை பாலாக
பாசத்தோடு ஊட்டி
பசியாற செய்திடுவாள்
இவள் பாசத்திற்கு அளவே இல்லை

இரவு வேளையில்
நிலாவை காட்டி சோறு ஊட்டுவாள்
அழும்போது தலாட்டபாடுவாள்
இவள் பாசத்திற்கு ஈடாகும் எதுவும்
இவ்வுலகில்லில்லை

\- கு.பதுர்சிகா




அன்னை என்றொரு ஆலயம்
அங்கே அன்பு மட்டுமெ ஜீவனம்
காணிக்கை கேற்காத கடவுள் அவள்
காலடியில் காணக்கிடைக்கும்
அவளின் அருள்

பத்துத்திங்கள் கருவிருந்தேன்
அவள் பளிங்கு முகத்தைக் கண்டிடவே
பாசம் புரளும் வங்க ிஅவள்
வட்டியின்றி முழுவதும்
தந்திடுவாள்

பத்துப் பிள்ளை பெற்றாலும்
முத்தத்தை பங்காய் பகிர்திடுவாள்
எத்தனை பிறவிகொண்டாலும்
உன் மகளாய் வாழும் வரம்வேண்டும்
இல்லை ஒரு பிறவியாவது
என் மகளாய் மடியினில்
தவழ்ந்திட வேண்டும் நீ

\- வ.சேதுகா

# கூட வரும் கல்வி

ஜெகராசா ஜனனி

கரைகாண முடியாத
காவியத் தோப்பு இது
கால் வைத்து ஊன்றிவிட்டால்
காலமெல்லாம் கூடவரும்
வெந்தீயால் வேகாது
வெள்ளத்தால் அழியாது
வேறொருவர் பறிக்கமாட்டார்
வேதனையைத் தரவும் மாட்டார்




துள்ளித் திரியும் வயது முதல்
துடிப்புள்ள இளைஞனாகி
தள்ளாடும் வயதினிலும்
தடியூன்றி நடந்தாலும்
வயதெல்லை கிடையாது
வளம்பெறவும் தடையேது
கல்வி கற்றோர்க்கு
எங்கெங்கும் சிறப்பு


கல்லார்க்கு அவனியிலே இழப்பு
பொன்னோடு புகழ் சேர்த்து
புவிதனிலே வாழ்ந்தாலும்
கல்வி மட்டும் இல்லையெனில்
காசினியில் ஆவதென்ன
கல்வி நாம் கற்றிடவும்
பட்டம் பல பெற்றிடவும்
கைகொடுத்து தூக்கிவிட
பட்டம் பல பெற்றிடவும்
கைகொடுத்து தூக்கிவிட
கனிவு நிறை ஆசான்கள்
அறிவுச் சுடராக
அவனியிலே எம் வாழ்வை
ஆக்கிவிடும் தெய்வங்கள்

கல்வியை நீ கற்றுப்
பட்டங்கள் பல பெற்றால்
பெற்றோற்கு அது பெருமை
பிறந்த ஊரிற்கு நீ பெருமை!

# காலைச் சிறாரின் கைவண்ணம்



ஜெ.லோஜிந்தன்
தரம் 8



ஜெ.லோஜிந்தன்
தரம் 8





அரவிந்
தரம் 6

ச.தாட்சாயினி


தரம் 8



ஜெ.லோஜிந்தன்

தரம் 8



சி. துவாரகன்

தரம் 6



# பெண்

சி. துவாரகன்

உலகை விருத்திசெய்ய
இறைவன் தேர்ந்தெடுத்த
இனியவள்தான் பெண்!

அன்புக்கும்
அரவணைப்புக்கும்
அத்திவாரம் பெண்!

குடும்பம் எனும் உறவின்
ஆணிவேர் பெண்!

பொங்கும் சீற்றத்திலே
பொறுமை கொள்பவள் பெண்!

உனக்கும் எனக்குமிவ்
உலகைக் காட்டிய தாய் பெண்!

பெண்ணின்றி உலகில்
உயிரெதுவும் இல்லையே!

# பாசம்



- நா. லக்சிகா

என்றும் போலவே பிரம்மை பிடித்தவன் போல் சிந்தனையில் மூழ்கியிருந்த அருணின் மனதில் அந்த அகோர விமானக் குண்டுவீச்சு மீண்டும் தோன்றிப் பயமூட்டியது. தாய் தந்தையருடன் மகிழ்வாக வாழ்ந்த அந்தக் காலத்தில் எமனாக வந்த அந்த விமானக் குண்டுவீச்சில் எஞ்சியது அவனும், அவனது தங்கை பானுவும், அந்தப் பயங்கரமான நினைவுகளுமே. அந்த விமானக் குண்டுவீச்சிலே மரணமான அவனது பெற்றோர் இறுதியாகக் கூறிய வார்த்தைகள் சிதைந்த கல்வெட்டுப்போல் அவன் நெஞ்சில் பொறிக்கப்பட்டு இருந்தது. "பானு கவனம், அவளை நன்றாகப் படிக்க.........." வார்த்தைகள் முற்றுப்பெற முன்னமே காலநோடு அவசரமாகப் பயணமாகிவிட்டனர். அண்ணா! அண்ணா! என்ற பானுவின் வார்த்தைகள் அருணுக்குச் சுயநினைவு ஊட்டின. "அண்ணா நாளை இன்றநெற்றில் பெறுபேறு பார்க்க முடியுமாம்." தங்கையின் குரல் அருணை மீண்டும் கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது. பெற்றோர் இறந்தவுடன் தங்கையுடன் தனிமரமாய் நின்ற அருணின் கண்களில் எதிர்காலம் பற்றிய பயமே குடிகொண்டிருந்தது. தற்கொலை செய்துகொள்வோமோ என்ற எண்ணம்கூட சில நேரங்களில் தோன்றியது. ஆயினும், பானுவின் பிஞ்சு முகமும், பெற்றோரின் இறுதி வார்த்தையும் அவனது உள்ளத்தில் இலட்சிய வெறியை விதைத்தது.

எது வரினும் தாங்கும், திடமான உள்ளம் கொண்டவனானான். எந்தவொரு சொத்தையும் பிள்ளைகளுக்குச் சேர்த்து வைக்க முடியாத வறுமை நிலையில் வாழ்ந்த பெற்றோர்க்கு மூத்த மகனாகப் பிறந்தவனான, அவ்வேளை 15 வயதேயாகியிருந்த அருணுக்கு தங்கையை வளர்க்கவும் படிக்கவைக்கவும் பணம் தேவைப்பட்டது. வேலை தேடி அலைந்தான். அலுவலகங்கள், கடைகள், வீடுகள் என எல்லா இடங்களிலும் வேலைக்குப் பதிலாக கேள்வியையே கொடுத்தனர். சின்னப் பொடியனால் என்ன செய்ய முடியும்? அவற்றுக்கு அவன் கூறிய பதில்களெல்லாம் கடல்மேல் பெய்த மழைபோல் ஆனது. இலட்சியத்திற்தும் ஏமாற்றங்களுக்குமிடையில் பெரும் குருஷேத்திரமே நடந்துகொண்டிருந்தது. இலட்சியத்தின் கை ஓங்கியது. தூரத்து உறவினர் ஒருவரின் சிபாரிசுடன் கடையொன்றில் வேலை கிடைத்தது. அருணின் நேர்மையும் திறமையும் கஸ்டங்களுடன் போராடக் கைகொடுத்தது. ஆனால், அது தங்கையின் கல்விக்கும் கஞ்சிக்கும் மட்டுமே காணுமாயிருந்தது. பானுவும் அண்ணனின் கஸ்டங்களைப் பார்த்துக் கல்வியே கண்ணாக உழைத்தாள். அருணின் அறிவுரைகளும், பெற்றோரின் கடைசி ஆசையும் அவளை வகுப்பில் முதல் தரத்தில் இருக்கச்செய்தது. க.பொ.த சாதாரண தரத்தில் அனைத்துப் பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்று உயர் தரத்தில் கலைப்பிரிவில் பரீட்சை எழுதிய பானு இன்று பெறுபேறுக்காகக் காத்திருக்கிறாள்.

அனைவரும் எதிர்பார்த்தது போலவே அவளுக்கு மூன்று பாடங்களிலும் எ தரச் சித்தி கிடைத்தது. பானுவினது பட்டதாரி ஆசிரியராக வந்து சமூகப் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆசை நிறைவேற வழியும் திறந்தது.

---

## உறைக்கும் உண்மைகள் - ஜெ.நிவர்சன்

செல்லப்பிராணிக்கு ஊசிபொடுகின்றார்கள்
நொய்கள் வராமல்
மனிதர்கள் நோயால்
இறந்து கொண்டிருக்கிறார்கள்



★★★



பெண்களை ஏற்றுமதிசெய்கின்றார்கள்
வெளிநாடுகளிற்கு வரியுடன்

★★★

குழந்தைகள் கனவுகானும் நேரம்
உலகம் கொஞ்சம்
உறைநிலைக்குச் செல்லட்டும்



★★★



புத்தகங்களை மறந்த மாணவர்கள்
பட்டங்களுக்கு முனைகின்றனர்

★★★

# மரங்களை வளர்ப்போம்

- ச. கிரிசா

இலங்கையில் பாதுகாக்கப்பட்ட பல காடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிங்கராஜ வனம் முக்கியமானதாகும். இக்காடுகளில் பல பெறுமதியான மரங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இயற்கை அன்னை தந்த பெருஞ்செல்வங்களான இக்காடுகள் பல்வேறு விலங்குகளினதும் புகலிடமாக திகழ்கின்றது.

மரங்கள் மனிதனுக்குப் பல பயன்களை வளங்குகின்றன. பிராண வாயுவையும், உணவையும், நிழலையும், குளிர்ச்சியையும், தளபாடங்களையும், கட்டடப் பொருட்களையும், விறகையும் தருகின்றன. பூமியின் தட்ப வெப்பத்தைச் சமநிலையில் பேணுவதுடன் மண்ணரிப்பிலிருந்து நிலத்தையும், அதன் வளத்தையும் காக்கின்றன.

காடுகள் பல தேவைகளுக்காக அழிக்கப்படுகின்றன. விவசாய நில விரிவாக்கம், நகர விரிவாக்கம், குடியிருப்புக்கள், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், கட்டடப் பொருட்கள், தளபாட உற்பத்தி, விறகுத் தேவை ஆகியன அவற்றில் குறிப்பிடத்தக்கன. காடுகளைப் பாதுகாக்கப் பல்வேறு சட்டங்கள் இருந்தபோதும் களவாகச் சட்டவிரோதமாகக் காடுகளைக் கொள்ளையடிப்போரால் பெரும் காடிழப்பு ஏற்படுகின்றது.

அழிவில் இருந்து மரங்களைப் பாதுகாக்க புதிய மரங்களை நடுவதுடன் மரப் பொருட்களிற்குப் பதிலாக வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். வீதியோரங்களில் நிழல் தரும் மரங்களை நடவேண்டும். மாணவர்களாகிய நாம் பாடசாலை மட்டத்திலும் வீடுகளிலும் மரங்களை நடுவதுடன், மரநடுகை பற்றிப் பிரச்சாரமும் செய்யவேண்டும்.

**மரங்களே இவ்வுலகைத் தாங்கி நிற்கும் தூண்கள்**






**ஒவ்வொரு மரமும் பலநூறு மனிதர்களைக் காக்கின்றன - மரம் ஒன்று தறிக்கப்படும்போது பலநூறு மனிதர் வாழ்வும் கேள்விக்குறியாகின்றது.**

# பழங்கள்




யா.மாதங்கி
தரம் 6



தின்னத் தின்னச் சுவையாக
தேன்போல் இனிக்கும் பழவகைகள்
என்றும் கிடைக்கும் படியாக
இயற்கை எமக்குத் தருகின்றது

உடலுக் குரிய பல்வேறு
ஊட்டம் ஊட்டும் சக்திகளும்
உள்ளடங்கி யிருக்கும் பழங்களைநாம்
அமிழ்தம் என்றால் மிகையில்லை

# கடவுள்





எங்கும் நிறைந்தவர்ஷ
எல்லாம் வல்லவர்
என்றும் உள்ளவர்
எம்மைக் காப்பவர்

அன்பு கொண்டவர்
அரவணைப்பவர்
அச்சம் தவிர்ப்பவர்
அன்னையானவர்

என்றும் உள்ள கடவுள்
எம்மில் நிறைந்த கடவுள்
அதரமான கடவுள்
அனைத்துமான கடவுள்

# My Self



Y. Seyavan

My name is Seyavan. I am a boy. I am nine years old. I study in grade four. I study at Jaffna College. . I live in Panippulam. My fathers' name is Yathavan. My mothers' name is Inthumathy. I have one brother and a sister. My brothers' name is Sowmiyan. My sisters' name is Mathanky. My grand fathers' name is Ratnathurai. My grand mothers' name is Bagvathi amma. My father is an excise officer. My mother is a teacher. My best friend is Sathjaharan.

My pet is a cat. My favourite game is cricket. My hobby is drawing. My favurite bird is parrot. My favurite animal is lion. . My favourite flower is sunflower. My favurite fruit is orenge. My favurite colour is gold. . My favurite vegetable is carrot. My favurite food is pittu. I like ice cream very much.

---

### உறைக்கும் உண்மைகள் -




ஒருவன் தன் ஆயுள் எல்லையை
நோக்கிச் சொன்று கொண்டிருக்கிறான்
கையில் போத்திலுடன்

***

பல பத்திரிகையாளர் இன்று
விலை கொடுத்து வாங்கப்பட்டுவிட்டனர்
அபிவிருத்திப் பணத்தில்

***



ஏழைச் சிறுவன்
தன்னை மறந்து கோபுரத்தை
ரசித்துக்கொண்டிருக்கின்றான்
கையில் இருந்த உணவை
காகம் தட்டிச்சென்றது

***

# எமது கிராமத்தைப் பற்றிய இணையத் தளங்களை அறிந்துகொள்வோம்

- panncom.net
- Panippulam.com
- Kalaiyadi.org
- Kaladdi.com
- Theebam.com
- Panipulam.net
- Saanthaipillayar.com
- Panipulam.net

puthiyakaalaikkathir.blogspot.com
புதிய காலைக்கதிர்
கலை இலக்கிய இதழ்




## படிப்போம் – படைப்போம்



# இணையத்தில் தமிழ்ப் புத்தகங்களை இலவசமாக பெற்றுக்கொள்ள

நூலகம் திட்டம் - www.noolaham.org

மதுரைத் திட்டம் - www.projectmadurai.org

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் - www.tamilarangam.net

சென்னை நூலகம் - www.chennailibrary.com/ebooks/ebooks.html

தமிழ் இணையப் பல்கலைக்கழக நூலகம் - www.tamilvu.org/library/libcontnt.htm

தமிழ் மரபு அறக்கட்டளை - www.e-mozi.com/bl_thf/bl_thf.html

கீற்று (சிற்றிதழ்கள்) - www.keetru.com

ஊடறு (பெண்களின் நூல்கள்) - udaru.blogdrive.com/archive/222.html

பெரியார் மின் நூல் தொகுப்புத் திட்டம் - www.periyar.org.in/v/content/blogsection/4/44/lang>en/

திராவிடர் (பெரியார் நூல்கள்) - www.dravidar.org/veliyeedugal.htm

சமண மின்னூல்கள் - www.jainworld.com/JWTamil/jainworld/JWTamil.htm

வள்ளலார் நூல்கள் - www.vallalar.org/

தமிழமுதம் - tamilamutham.net

நிலாச்சாரல் - www.nilacharal.com/download/index.html

**ஒரு புத்தகத்தைக் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு தருபவனே மனித குலத்தின் உண்மையான விடிவெள்ளி - ஜான் மில்டன்**

**ஒரு புத்தகம் 100 நண்பர்களுக்குச் சமம் - சர் ஐசக் நியூட்டன்**

**ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது, உலகினை நோக்கிய ஒரு சன்னலைத் திறக்கிறோம் - தோழர் சிங்காரவேலர்**



இந்திய விடுதலைப் போராளி லாகூர் சிறையிலிருந்த பகத்சிங்கை தூக்கிலி டுவதற்கு தயார்படுத்துவதற்காக சிறைக் காவலர்கள் முன் கூட்டியே 23 - ஆம் தேதி மாலையே அழைத்தார்கள். மறுநாள்தான் தூக்கு தண்டனை என்று அறிந்திருந்த பகத்சிங், முன்கூட்டியே முதல் நாளே தூக்கிலிடப் போகிறார்கள் என்பதை அறிந்திருக்கவில்லை. அதனால் காவலர்கள் அழைத்த போது, நான் இங்கே ஒரு போராளியுடன் உரையாடிக்கொண்டிருக்கிறேன். அதனால் தொந்தரவு செய்யாதீர்கள் என்று சிறைக்குள்ளிருந்து குரல் கொடுக்கிறார்.

வேறு யாரோ போராளி சிறைக்குள்ளே புகுந்து இருவரும் ஏதோ திட்டம் தீட்டுகிறார்களோ என்று காவலர்கள் பயந்துவிட்டனர். சிறிது நேரம் கழித்து அவரே வெளியே வருகிறார். உள்ளே பார்த்தால் அவரோடு வேறு யாரும் இல்லை. ஆனால் அவர் கையில் ஒரு புத்தகம் இருந்தது. மாமேதை லெனின் எழுதிய அரசும் புரட்சியும் ( STATE AND REVOLUTION ) என்ற புத்தகம் தான் அது. அதுவரையில் அந்த புத்தகத்தை படித்துக்கொண்டி ருந்ததால், நான் ஒரு போராளியுடன் உரையாடிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்.

அந்த புத்தகத்தை காவலர்கள் வாங்கிப்பார்த்த போது, அந்த புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் இந்த புத்தகத்தை இந்திய மக்கள் அனைவரும் படிக்கவேண்டும் என்று எழுதி கையெழுத்திட்டிருந்தார். இது தான் இந்திய மக்களுக்கு அவர் கடைசியாக விடுத்த வேண்டுகோள்.

---

ஒருவர் மூளைக்கும் இருக்கும் சிந்தனை மகரந்தங்களை மற்றொரு மூளைக்குள் கொண்டு செல்லும் தேனீக்கள்தான் புத்தகம் - ஜேம்ஸ் ரஸ்ஸல்

என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள், இங்கே ஒரு புத்தகம் உறங்குகிறது என்று - பெட்ரண்ட் ரஸ்ஸல்

புத்தகங்களும், நூலகங்களும் இல்லாத நாடு சிறைச் சாலைக்கு ஒப்பாகும் நெப்போலியன்

மொத்த இறந்த காலத்தின் ஆன்மாவும் வசிக்குமிடம் புத்தகம் - தாமஸ் கார்லைல்

ஒரு நூலகத்தின் கதவு திறக்கப்படும்போது ஒரு சிறைச் சாலையின் கதவு மூடப்படுகிறது - பைபிள்




புத்தகங்கள், மக்கள் எழுச்சியின் சக்திவாய்ந்த ஆயுதம்


கௌசா
அழகு சாதனப் பொருட்க்கள்
அன்பளிப்புப் பொருட்க்கள்
அலங்காரப் பொருட்க்கள்
மற்றும் பல பொருட்க்கள்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

# கலைமகள் விலாஸ்

# Kalaimagal Vilas

மங்களகரமான அனைத்து வைபவங்களிற்கும் சகல விதமான உணவு வகைகளும் சுகாதார முறைப்படி, குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் வழங்கப்படும்.

பிரதான வீதி, சங்கானை. Main Street, Chankanai.

# முத்துமாரி

புடவை அன் பான்சி சூ பலஸ்

## Muththumari Tex & Fancy Shores Palas







பிரதான வீதி, பண்டத்தரிப்பு. Main Street, Pandateruppu.




பிரதான வீதி, சங்கானை. **Main Street, Chankanai.**

# சாயினி சொவ்ற் டிறிங்ஸ்

# Shajini Soft Drinks



பிரதான வீதி, சங்கானை. **Main Street, Chankanai.**





பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

# தனு படமாடம்

சகல விதமான பிறேம்களும் நவீன முறையில் செய்து தரப்படும்







பொதுச் சந்தைக்கு வலது புறமாக, பண்டத்தரிப்பு.



தென்னாடுடைய சிவனே போற்றி !
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி !

சகல பொருட்களையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

# ஸ்ரீ அம்பாள் ட்றேடர்ஸ்

பண்டத்தரிப்பு

அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளிற்கும்

# அம்பிகை

## பட்டுச்சோலை

# Ambikai Padducholai



பிரதான வீதி, சங்கானை.

Main Street, Chankanai.

சகல விதமான கையடக்கத் தொலைபேசி விற்பனையும் திருத்துதலும்

All models of mobile phones, Phone accessories & Un locking.

# நியூ கிருஸ்ணா போன்சொப்

# New Krishna Phone Shop



பிரதான வீதி,
சங்கானை.

Main Street,
Chankanai.



நவ நாகரீக ஆடைகளின் பூங்கா

# வளர்பிறை பட்டுச்சோலை

# Valarpirai Padducholai

பிரதான வீதி, சங்கானை. Main Street, Chankanai.